# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 10 மலர் : 5  Plant : 10 Flower 5

மார்ச் 2025 / March 2025

ஆண்டு சந்தா ரூ.50/-  Annual Subscription Rs.50/-

தனிபிரதி விலை ரூ.5/-



**அவசர ஜெப உதவிக்கு**

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

**94433-46119**

# ஆசிரியர் மனம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு

நமம்ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் வாழ்த்துகள் கூறி எழுதும் மடல். நலம். நீங்களும் நலமுடன் இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன்.

2025ஆம் ஆண்டு துவங்கி இரண்டு மாதங்கள் கடந்து போக தேவன் கிருபை பாராட்டியுள்ளார். இந்த புதிய மாதத்திலும் தேவன் நமக்கு பல நன்மைகளை தருவார் என விசுவாசிக்கிறேன். கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது. (சங். 34:10)

ஒரு காரியத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள போகிறேன். என் கணவர், இந்த ஊழியத்தின் ஸ்தாபகரும், தலைமை போதகருமாகிய **Rev. Dr. Victor Vimal** அவர்கள் கடந்த 8.2.25 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார் என்பதை மிகவும் துக்கத்தோடே உங்களுக்கு தெரிவிக்கிறேன். இந்த சபை ஊழியம், பத்திரிகை ஊழியமும், மற்ற எல்லா ஊழியங்களும் தொடர்ந்து நடைபெறும். நீங்களும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வாசக நண்பர்களுக்கு :- இப்பத்திரிகை பிரதி மாதமும் 1000 எண்ணிக்கை விநியோகிக்கப்படுகிறது. சந்தா மட்டும் சிலரிடமிருந்துதான் வருகிறது. எம் சபை விசுவாசிகள் 3 பேரும், அதுவும் 6 (அ) 7 பேர் 50, 100, 200 என்று அனுப்புகிறார்கள். மற்றும் RNI Registration Regd. Magazine Postal Concession நிறுத்தப்பட்டுள்ளது? எனவே செலவு அதிகம் 0.25 பைசாவுக்கு பதில் ரூ.2-லிருந்து ரூ. 4/- வரை செலவாகும். எனவே இதை மனதில் கொண்டு தேவையானவர்களுக்கு மட்டும் அனுப்ப தீர்மானித்துள்ளேன்.உங்கள் விருப்பத்தை அறிய விரும்புகிறேன். Whatsapp-ல் Message அனுப்பினால் கூட போதும். இதுவரையில் இலவசமாகத்தான் அனுப்புகிறேன். இனியும் அனுப்புவேன். நீங்களும் எங்களுக்காக ஜெபியுங்கள். உங்களுக்காக நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன். விலாசங்கள் மாறினாலோ, அல்லது விருப்பம் இல்லை என்றாலோஎங்களுக்கு தெரிவியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

கர்த்தரின் கிருபையும், ஆசீர்வாதமும் உங்கள் யாவரோடும் இருப்பதாக.

இப்படிக்கு,

கிறிஸ்துவின் பணியில் உங்களின் அன்பு சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# "விசுவாசியை தேவன் அறிவார்"

எனக்கருமையான சகோதரனே! சகோதரியே !

விசுவாசியாகிய உன்னை தேவன் அறிவார். கர்த்தருடைய கண்கள் (நீதிமான்கள்) விசுவாசிகள் மேல் உள்ளது. தேவனைத் தேடுகிறவர்கள் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்தில் இருந்து கண்ணோக்கினார் (சங். 14:2)

சிறுமையும் எளிமையுமானவன் மேல் நினைவாய் இருக்கிறார். (சங். 40:17) விசுவாசியை தேவன் கூடுதலாகவே கவனிக்கக் கூடியவராய் உள்ளார். ஆனால் விசுவாசியோ பதறுகிறான். "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா 28:16) "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது" (ரோ. 10:11) எனக்கு அருமையான விசுவாசிகளே உங்களை தேவன் நன்றாகவே அறிந்துள்ளார். எனவே மேற்படி தலைப்பின் கீழ் ஒரு செய்தியை அறிவோமாக ! இதற்கு ஆதாரமாக வெளி 2:2 யினை தொடர்ந்து ஆராய்வோம். ஒரு விசுவாசியின் 15 நிலைகளை (குணங்களை) அவர் (தேவன்) அறிந்ததை பார்ப்போமாக.

## 15 நிலைகள் (குணங்கள்)

"1) <u>உன் கிரியைகளையும்,</u> 2) <u>உன் பிரயாசத்தையும்</u> 3) <u>உன் பொறுமையையும்,</u> நீ பொல்லாதவர்களைச்சகிக்கக் கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், 4)<u>நீசகித்துக் கொண்டிருக்கிறதையும்,</u> பொறுமையாயிருக்கிறதையும்,என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். (வெளி 2:2,3)

'<u>உன் கிரியைகளையும்,</u> 5) <u>உன் உபத்திரவத்தையும்</u>, 6) <u>நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும்</u> உனக்கிருக்கிற <u>தரித்திரத்தையும்,</u> தங்களை யூதரென்றும் சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும், அறிந்திருக்கிறேன். (வெளி 2:9) ' <u>உன் கிரியைகளையும்,</u> சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும் 7) <u>சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே</u> உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்." (வெளி 2:13)

‘உன் கிரியைகளையும், 8) உன் அன்பையும், 9) உன் ஊழியத்தையும், 10) உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.’ (வெளி 2:19)

‘சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் எழுதுகிறதாவது ; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் 11) நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.

‘ உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; 12) உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும் 13) நீ என் நாமத்தை மறுதலியாமல், 14) என் வசனத்தைக் கைகொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். ‘உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; 15) நீ குளிருமல்ல, அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்’

(வெளி 3:1,8,15)

மேற்குறிப்பிட்ட 15 விதமான குணலட்சணங்களை தேவன் அறிந்துள்ளார். குறிப்பிடப்பட்ட வசனங்களின் துவக்கங்களை கண்ணோக்கிப் பாருங்கள். கிரியைகள், கிரியைகள், கிரியைகள் என்றிருக்கும். தேவன் ஒரு விசுவாசியின் கிரியையைத்தான் முதலில் பார்க்கிறார். அந்த கிரியையின் செயல்பாடும், அதின் நோக்கமும் முடிவும் என்ன? என்பதை தேவன் அறிவார். எங்கு குறைவு? எங்கு நிறைவு, எங்கு தேவை என்பதை நன்கு அறிந்த தேவனாய் உள்ளார்.

## குறைவுகள்

ஒரு விசுவாசி ஆரம்பகாலத்தில் தேவனிடத்தில் கொண்டிருந்த அன்பை அறிவார். அது நாளடைவில் குறைந்து நானும் ஒரு விசுவாசி (அ) நானும் ஒரு கிறிஸ்துவன் என்கிற அளவில் மாறிவிடுவதால், கர்த்தர் அதை தெளிவுபடுத்தும் போது, ‘நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு’ (வெளி 2:4) என்று சொல்லுகிறார்.

மேலும், தேவன் விரும்பாத (அ) வெறுக்கிற கிரியைகள் நம்மிடத்தில் உண்டு என்பதை வெளி 2:6ல் குறிப்பிடும்பொழுது, ‘ நான் வெறுக்கிற நிக்கொலாய் மனுஷரின் கிரியைகள் உண்டென்று’ கூறுகிறார்.

வெளி 2:14ல் கூறும்போது, விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசிக்கிறாய் என்றும், வேசித்தனம் பண்ணுகிறதற்கு ஏதுவான தவறான போதகங்களை கைக்கொள்ளுகிறவர்களும் உண்டு

என்றும் மனஸ்தாபப்படுகிறார்.

வெளி 2:20ல் உன்பேரில் எனக்குக் குறைவு உண்டு என்னவெனில், தன்னை தீர்க்கதரிசியென்று சொல்லுகிற, யெசபேலைப் போல தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களும் உண்டு என்று சொல்லுகிறார்.

I தெச 3:10ல் உங்கள் விசுவாசத்தின் குறைவுகளைக் கண்டு உள்ளார்.

இப்படி பல குறைகள் நம்மிடத்தில் இருக்கிறதையும் அவர் அறிந்துள்ளார்.

## தேடுகிறவர்கள்

மேற்பட்ட குறைவுகள் உள்ளவர்கள் இருந்தாலும், தேவனைத் தேடி பலனைக் காண்கிறவர்களும் உண்டு எப்படியும் செய்வார்என்ற நம்பிக்கை உடையவர்களும் உண்டு. “கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது” (சங் 34:10) “கர்த்தரைத் தேடுகிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடுகிறதில்லை” (சங் 9:10) கர்த்தரை தேடினோம். தேடினபொழுது சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைத் தந்தார் என்று சொல்லுகிற இராஜா ஆசாவைப் போல இருக்கிற விசுவாசிகள் உண்டு என்று அறிவார்” (II நாளா 14:7) மேலும், “பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது தேவன் லேசான காரியம்’ (II நாளா 14:11) இப்படி தேவன் மீது நம்பிக்கை வைக்கிற ஜனங்கள் உண்டு என்பதை அவர் அறிவார்.

## எப்படியும் செய்வார்

மனுஷர்களுக்கு சோதனைகள், தடைகள், வேதனைகள், தேவைகள், இப்படி பல உண்டு என்பதை அவர் அறிவார். அதினால் தேவன் இந்த மனிதனுக்கு முன்பாக நடந்து போவாராக. “ தடைகளை நீக்கிப் போடுகிறவர் உனக்கு முன்பாகக் கடந்து போகிறார்” (மீகா 2:13) அதுபோன்று “வழியிலே உன்னைக் காக்கிறதற்கும் அவர் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்திற்கு உன்னை கொண்டுபோய் சேர்க்கிறதற்கும் ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். மேலும், உனக்கு எதிராளியாய் செயல்படுகிறவர்களை சந்திக்கும்படி உன்னை நடத்திச் செல்ல தம் தூதனை அனுப்புவதாக மோசேவிடம் சொன்ன அதே தேவன் இன்றும் உன்னை வழிநடத்துவார் (யாத் 23:20-23) அதல்லாதபடிக்கு உன் தேவைகளைச் சந்திக்கும்படி வடக்கை நோக்கிக் கொடு என்றும் தெற்கே வைத்திராதே என்றும் கூறுகிற (ஏசா 43:6) நல்ல தேவன் நமக்கு உண்டு அந்த திசையிலுள்ள புறஜாதியான இராஜா கோரேசை எழுப்பி தேவனுடைய ஆலயத்தைக் கட்ட எழுப்பினது போல, (ஏசா 44:28) உன்

வீட்டைக் கட்ட உரிய நபர்களை எழுப்பவும் தேவன் அறிந்துள்ளார்.

### துன்பம் / ஏமாற்றுகிறவன்

யாக்கோபு தன் வாழ்விற்காக பிரயாசப்பட்டு தன் மாமனாகிய லாபானிடம் பணிபுரிந்தான். யாக்கோபின் எதிர்பார்த்தலை அறிந்த லாபான், எப்படியும் இவனிடம் பணிகளை வாங்கி கொள்ள நினைத்து ஆசை வார்த்தைகளினால் அவனை திருப்தியாக்கி ராகேலை மணமுடித்து கொடுக்காமல் லேயாளை மணமுடித்து கொடுக்கிறான். அவன் விரும்பின பெண்ணை மணமுடிக்க மேற்கொண்டு 7 ஆண்டுகள் அவனிடத்தில் ஆடுகளை மேய்த்தான். அத்துடன் அவளை விட்டு விடாதபடி தன்னுடைய ஆடுகளை மேய்க்க கேட்கிறான். இதனைக் குறித்து தேவன் கூறும்போது, லாபான் உனக்கு செய்கிற யாவையும் கண்டேன் (ஆதி 31:12) அவன் உன் சம்பளத்தை 10 முறை மாற்றினான். (ஆதி 13:7) உன்னை ஏமாற்றுபவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களையும் அறிவார். ஆம், ஆளோட்டிகளிநிமித்தம் இடுகிற கூக்குரலைக் கேட்டார். உபத்திரவத்தைப் பார்த்தார். வேதனைகளை அறிந்தார். அவர்களுக்காக இறங்கி மோசே அழைப்பித்து பாலும் தேனும் ஒடுகிற விசாலாமான தேசத்தை தேவன் தந்தார். (யாத் 3:7-10) ஆம். உன் துன்பத்தை / ஏமாற்றத்தை அறிவார். விடுதலையும் தருவார்.

### சிறைச்சாலை

அநியாயமாய் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைச்சாலைக்கு சென்ற யோசேப்பை அறிந்த தேவன் அவனோடு இருந்தார். அவனுடைய காரியங்கள் யாவையும் வாய்க்கப் பண்ணினார். மேலும் அவனை மீட்டு, உயர்த்தினார் (ஆதி. 39:21-23).

பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டவர்களாய் தேவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்களை தேவன் அவர்களை அறிந்து அவர்களுடைய கட்டுகளைத் தகர்த்தெறிந்து விடுதலையைத் தந்தார். விசுவாசியே நீ எந்த நிலையில் இருந்தாலும் கர்த்தர் அறிகிறார்.

### துக்க முகம்

அரமனையில் இராஜாவுக்கு திராட்சரசத்தைக் கொடுத்தவனாகிய நெகேமியாவின் முகம் துக்கமாய் இருந்ததை இராஜா கண்டு ஏன் உன் முகம் துக்கமாயிருக்கிறது? வியாதி ஒன்றும் இல்லையே என் று விசாரித்து அவனுடைய எதிர்பார்த்தலை அறிந்து தேவனுடைய ஆலயத்தின் அலங்கம் கட்டப்படுவதற்கு இராஜா உதவி செய்தார். (நெகே 2: 2-5) அதில் 4ஆம் வசனத்தை வாசிக்கும்பொழுது, இராஜா விசாரித்தவுடன் அவன் (நெகேமியா) ஜெபிக்க ஆரம்பித்தான். அவன் ஜெபத்தை தேவன்

கேட்டு இராஜா உத்தரவு பிறப்பிக்கிறதற்கு தேவன் அநுக்கிரகம் செய்தார். எனவே, துக்கமாயிருக்கிற யாவரையும் தேவன் காண்கிறவராயும் அதிலிருந்து விடுவிக்கிறவருமாயிருக்கிறார்.

### அபகரிப்பு

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப் தன் அரமனைக்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய ஒரு ஏழை குடிமகனாகிய நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை எடுத்துக் கொள்ளப் பிரியமாயிருந்தான். அதற்கு யெசபேல் உறுதுணையாய் இருந்து அவனைக் கொலை செய்து தோட்டத்தை அபகரிக்க நினைத்தாள். இச் செய்தியை கேள்விப்பட்டு கண்ணுற்ற தேவன் எலியாவைக் கூப்பிட்டு இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை சந்திக்கும்படி போ என்றார் (I இரா. 21:18) வஞ்சிக்கப்படுகிறவர்களையும், வஞ்சிக்கிறவர்களையும் தேவன் அறிவார். அதிலும் விசுவாசியை அவர் ஒருபோதும் மறப்பதில்லை.

### கடன் பிரச்சனை

கடன் பிரச்சனையினால் அவதிக்குள்ளாகி தன் இரண்டு குமாரர்களையும் அடிமைத் தனத்திற்கு விற்றுப் போட்டு, வேதனையோடும், கண்ணீரோடும் வாழந்து வந்த, தீர்க்கதரிசியின் மனைவியாகிய அந்த விதவையை கர்த்தர் அறிந்தார். எலிசாவை அனுப்பி, அவள் கையிலிருந்த ஒரு குடம் எண்ணெயை ஆசீர்வதித்தார். அதைக் கொண்டு அநேக வெறும் பாத்திரங்களை நிரப்பி கடன் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளும்படியாகச் செய்தார். அந்த தேவன் விசுவாசியாகிய உன்னையும் உன் நிலைமைகளையும் அறிந்திருக்கிறார்.

### வியாதி

எசேக்கியா இராஜா வியாதிப்பட்டு மரணத் தருவாயில் இருந்தான். அவன் பிழைக்க மாட்டான் என்கின்ற வார்த்தையை ஏசாயா தீர்க்கதரிசி மூலமாகத் தேவன் தெரிவித்தார். அவனோ முகங்குப்புற விழுந்து தேவ சமூகத்தில் விண்ணப்பித்ததை தேவன் அறிந்தார். மீள ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக அவன் தன்னைத் தாழ்த்தினதை அறிந்து அவன் ஆயுசு நாட்களில் 15 வருடங்கள் கூட்டிக் கொடுத்தார். (II இரா 20:3-5) அதுபோன்று புதிய ஏற்பாட்டு விசுவாசியாகிய பேதுருவின் மாமி ஜுரமாய் இருக்கிறதைக் கண்டு அவளுடைய கையைத் தொட்ட மாத்திரத்தில் ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று. உடனே அவள் எழுந்திருந்து பணிவிடை செய்தாள். (மத் 8:15)

எனக்கருமையான சகோதரனே ! சகோதரியே ! உன்னுடைய குறைவுகளையும் நிறைவுகளையும் அறிந்த தேவன் உனக்காக யாவையும் செய்து முடிப்பார். மேற்கூறிய குறிப்புகளின்படியாக எல்லா

நிலைமைகளையும் அறிகிறவராய் இருக்கிறார். நீ ஐசுவரியம் உள்ளவனாய் இருந்தும் நீ தரித்திரவானாய் மாறினதையும் அறிவார். நீ இன்ன நிலைமையில் இருந்து விழுந்தாய் என்பதை அறிந்துணர்ந்து தேவனிடத்தில் திரும்பினால் போதும். அவர் மறுபடியும் உன்னை உயர்த்துவார். நீ சாத்தான் இருக்கக் கூடிய இடத்தில் குடியிருக்கிறாய் என்பதை அறிந்திருக்கிறார். புறஜாதியார்களின் மத்தியில் வாசமாய் இருக்கிறாய் என்பதையும் அறிந்திருக்கிறார். நீ அங்கிருந்து ஜெபத்தை ஏறெடுத்தாலுங் கூட நிச்சயம் பதில் தருவார். ஆனால், அதற்கு மாறாக அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு உட்படும் பொழுது உயிருள்ளவனாய் இருந்தும் செத்தவனாய் இருக்கிறாய் என்கிறார். மேலும் உன் வாழ்க்கை அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருக்கிறதென்பையும் அவர் அறிந்துள்ளார். அதனால்தான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளிலுள்ள மக்களின் (விசுவாசிகளின் நிலைமை) நிலைமையை தேவன் அறிந்து வெளி 2,3-ம் அதிகாரங்களில் தெளிவாய் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நமக்கு, எப்படி ஆபிரகாம் விசுவாசத்திலே எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொண்டானோ அது போன்று விசுவாசத்தினாலே ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் நாமும் நிச்சயமாக அடைய முடியும். தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவர். ஆபிரகாமின் தேவனையும் ஆபிரகாமின் விசுவாசத்தையும் சார்ந்தவர்களானால் நமக்கு சகலமும் நன்மையாக முடியும். (ரோ 4:16,17)

விசுவாசியே நம்மை தேவன் அறிவார். அவர் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிறார். எதிர்பார்க்கிற முடிவையும் தரக்கூடியவர். விடுதலையைத் தருபவர். சுகத்தையும் தருபவர். சமாதானத்தை வைத்துப் போனவர். மற்றவர்களைப் பார்க்கிலும் விசுவாசிகளாகிய நம்மையும் அறிந்திருக்கிறார்.

ஆமென் ! அல்லேலுயா !

## 2025 மார்ச் மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்."*

(ஏசா. 26 : 3)

# கண்டவைகளும் கேட்டவைகளும்

## சுகம் கொடுத்த தேவன்

என் பெயர் ஸ்டெபி பிரியங்கா, நான் நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே சாட்சி கொடுத்திருக்க வேண்டும். ஆனால் தடைபட்டு இன்று சொல்லவேண்டிய சூழ்நிலை வந்தது. என் வாழ்வில் மிகப் பெரிய அதிசயம் என்றால் அது என் Preganancyதான். பாஸ்டர் ஜெபித்து தான் எங்களுக்கு குழந்தை பேறு கிடைத்தது. என மகன் பிறந்து முதலாவது நாங்கள் ஆலயத்திற்கு தான் வந்தோம். பிறகு என் மகனின் முதல் பிறந்த நாளுக்குப் பிறகு அவன் உடல் முழுவதும் தழும்புகள் (Rashes) வந்து விட்டது. அப்பொழுது மருத்துவர்கள் அவனுக்கு Hand foot mouth disease என்று கூறினார்கள். ஆனால் நான் விசுவாசத்தோடே ஊழியரிடம் கூறி ஜெபித்தேன். அவரும் ஜெபித்தார். யெகோவா ராஃபா என் குழ்நதையை சுகப்படுத்தும் என்று நானும் இரவு ஜெபித்துவிட்டு படுத்தேன். மறுநாள் என் பிள்ளை முற்றிலும் குணமடைந்து விட்டான். இவ்விதமாய் நடத்தின தேவனுக்கு மகிமை உண்டாவதாக. ஜெபித்த பாஸ்டருக்கும், Auntyக்கும் நன்றி.

சகோதரி. **ஸ்டெபி பிரியங்கா** வேலூர்.

## சாட்சியாய் நிறுத்தினார்

என் பெயர் பாஸ்டர் மரியதாஸ், நான் ஒரு தீவிர இந்து குடும்பத்தை சார்ந்தவன். ஆனால் கர்த்தர் என்னை இரட்சித்து ஒரு ஊழியக்காரனாய் வைத்துள்ளார். நான் பல இடங்களில் பிரசங்கித்து இருக்கிறேன். ஆனால் இந்த CGA சபையில் என்னை ஒரு சாட்சியாக நிறுத்தியுள்ளார். Baharain நாட்டில் பணிபுரிந்து வந்த என்னை ஊழியத்திற்காக அழைத்து மலை தேசங்களில் வாழும் மலைவாழ் இன மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருகிறேன். எனக்கு Urineல் Blood அதிகமாய் வரும். இந்த பிரச்சனை எனக்கு பல ஆண்டுகளாக உள்ளது. வேலூரில் சி.எம்.சி. மருத்துமனையில் 3 (அ) 4 மாதங்களுக்கு ஒரு முறை பரிசோதித்து வருகிறேன். அப்படியாய் இந்த முறை நான் சிகிச்சைக்காக வந்த போது கர்த்தர் என்னோடு பேசி இந்த சபைக்கு போக கட்டளையிட்டார். நான் இங்கு வந்த பார்த்தபோது தான் தெரிந்தது சபை ஊழியர் 8-2-25 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்று

கேள்விபட்டு மிகவும் வருந்தினேன். நான் வேத பாடக்கூட்டத்தில் பங்கு பெற்று ஊழியரின் வார்த்தைகளை டிவி வாயிலாக பார்த்தேன். பிறகு அவரின் ஆறுதல் ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அன்று என் சரீரத்தில் ஏதோ நடைப்பெற்றது. தினமும் நான் சிறுநீர் கழிக்கும் போது முதலாவது அதிக ரத்தம்தான் வரும். ஆனால் அன்று கூட்டம் முடிந்து வீடு திரும்பி நான் Bathroom செல்கையில் ரத்தம் முற்றிலும் நின்று நன்றாக Urine Pass செய்ய கர்த்தர் கிருபை பாராட்டினார். இரவு நன்றாக உறங்கினேன். மறுாள் பரிபூரண சுகம் பெற்றேன். நம் ஊழியர் மரித்தும் இந்த சபையில் அற்புதங்கள், அதிசயங்கள் நடைபெறுகிறது என்பதற்கு நானே சாட்சி. சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி. ஜெபித்த பாஸ்டர் அம்மாக்கும், குடும்பத்திற்கும் நன்றி.

**பாஸ்டர் மரியதாஸ்** ஏற்காடு.

## ஊழியரின் வார்த்தைகளை நிலைப்படுத்தின தேவன்

என் பெயர் யாபேஸ், கர்த்தர் ஊழியர் மூலம் என் வாழ்க்கையில் அநேக அற்புதங்களையும், அடையாளங்களும் செய்திருக்கிறார். அதில் ஒன்று தான் இந்த சாட்சி நான் Saudi Arabiaவில் MOH ல் வேலை செய்து வருகிறேன். கடந்த மாதம் Vaccationக்காக இந்தியா வந்தேன். இதற்கிடையில் நான் Kuwait செல்ல வேண்டும் என்று Uncleலிடம் கூறி ஜெபித்து வந்தேன். அவரும் One hour prayerல் தொடர்ந்து ஜெபித்து வந்தார். எனக்கு Visa வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் போய் இந்த வேலையில் சேர நேரம் நெருங்கி விட்டது என்றேன். அப்பொழுது Uncle 2வாரம் Leave Extend செய்ய கூறினார். அதே போல நானும் செய்தேன். ஜெபித்து விட்டு உனக்கு 5ஆம் தேதியே Visa வந்திருக்க வேண்டும். ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. எனினும் நீ கவலைப்படாதே நீ Saudi போனவுடன் திரும்பி வருவாய் என்று சொன்னார். மறுநாள் என் ஊழியர் சொன்னபடி அவர் இல்லை. அவரை இறுதியாய் காண நான் மீண்டும் இந்தியா வந்தேன். அவர் சொன்ன வார்த்தையின் படியே 5, 10 நாட்களுக்குள் Kuwait Visa கிடைக்கும்படி செய்தார். ஊழியரின் வார்த்தையை நிலைப்படுத்தின தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

**Yabase Thomson,** Vellore

## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி |
| | காலை 5 am - 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am - 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7 pm - 8 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm - 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am - 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am - 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm - 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm - 8.30 pm |

## CGA Church Service and Live Streaming Schedules are given below in Indian Timings - IST

Every Day Tamil Msg-Live Streaming - 7 am to 8 am & 7 pm to 8 pm
SUNDAY SERVICE (TAMIL) : Every Sunday - 9am to 11.30 am
One hour Prayer with Pastor : Every Tuesday - 7.00 to 8.00 pm
BIBLE STUDY : Every Wednesday - 7.30 pm to 8.30 pm
FASTING & DIVINE HEALING MEETING :
2nd Saturday of every Month - 10.00 am to 2.30 pm
TARRYING MEETING :
4th Saturday of every Month - 7.30 pm to 8.30 pm
MORNING DEVOTION :
1st Day of the Month - 5.00 am to 6.00 am

Regd. under Newspaper RNI No.TNTAM/2015/66320 & Posting under / Book Pack of Containing Periodicals with RNI

# செய்திச் சிதறல்

1. புதிய தேர்தல் கமிஷனராக விவேக் ஜோஷி நியமனம்.
2. சண்டிகர் தமிழ் மன்றம் விரிவாக்கப் பணி ரூ.50 லட்சம் வழங்கினார் முதல்வர்.
3. திருச்சியில் டைடல் பூங்கா அடிக்கல் நாட்டினார் முதல்வர்.
4. பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட 5 லட்சத்து 18 ஆயிரத்து 785 விவசாயிகள் ரூ.498.8 கோடி நிவாரணம் வழங்க முதல்வர் உத்திரவிட்டுள்ளார்.
4. வணிக வரியில் ரூ.12,000 கோடி கூடுதல் வருவாய் அமைச்சர் மூர்த்தி தகவல்.
5. பூமி நோக்கி பாய்ந்து வரும் ‘சிட்டி கில்லர்’ விண்கல்.
6. உயிர்காக்கும் 36 மருந்துகள் விலை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை.
7. டில்லி முதல்வராக ரேகா குப்தா தேர்வு. டில்லியில் 4வது பெண் முதல்வராக பதவியேற்க உள்ளார்.
8. பால் உபப் பொருட்கள் விற்பனை அதிகரிக்கணும்; ஆவின் அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவு.
9. உணவுப்பொருட்களுக்கு வரி வேண்டாம். அரிசி ஆலை உரிமையாளர்கள் கோரிக்கை.
10. கூகுள் நிறுவனம் இந்தியாவில் தனது நான்காவது அலுவலகத்தை பெங்களூரில் நேற்று திறந்தது.
11. சமையல் எண்ணெய் விலை அதிகரிப்பு. டாலர் மதிப்பு உயர்வின் எதிரொலி.
12. தமிழக சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்கள் மத்திய அமைச்சரிடம் தங்கம் தென்னரசு மனு.
13. செல்போன் பேசியபடி பஸ் ஓட்டியதால் விபத்து; 8 பேர் காயம்.
14. மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவா? 14417 என்ற எண்ணுக்கு ‘கால்’ பண்ணுங்க.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal